**இலங்கை பட்மின்டன் சங்கம் - 2019**

------------------------------------------------------------

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

-----------------------------------

இலங்கை பட்மின்டன் சங்கத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.1 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை**

------------------------------------------------------------

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------
--

இந்நிதிக்கூற்றுக்களை இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் விளையாட்டரங்கினை ஒதுக்கிக் கொள்வதற்காக கிடைத்த நேரடி வருமானம் ரூபா 127,100 தொகை சங்கத்தின் முன்னால் நிறைவேற்று உத்தியோ கத்தரால் வங்கியில் வைப்புச் செய்யாமை காரணமாக அந்த உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டிய பெறுமதியாக தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அறவீடு நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்ட இப்பணம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடு செய்வதற்கு அல்லது வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பாக பட்மின்டன் சங்கத்தின் வருடாந்த பொது சபைக் கூட்டத்தில் தீர்மான மொன்றை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | அறவீடு நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்ட இப்பெறுமதிக்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சங்கத்தன் பாதுகாப்பு கெமறா முறைமையுடன் கூடிய 08 கெமராக்கள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 73,800 திருத்தச் செலவினமாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடை முறையல்லாத சொத்துக்கள் மற்றும் பற்றாக்குறை அப் பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்காக பதிவு செய்து கொள்ளப்பட்டது. | பாதுகாப்பு கெமறா கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த பணத்தை நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| விடயம் | தோகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 3,372,170 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2020 இறுதியின் போது நிலையான சொத்துக்களுக்காக பௌதீகெ மெய்மையாய்வொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஆதனங்கள் மற்றும் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய போதீிய மற்றும பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 9,473,197 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை 123,470 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,349,727 ஆன வீழ்ச்சயொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டுச் செலவினம் ரூபா 10,416,168 ஆல் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**3.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 500,00 சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் சங்கத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் இலங்கை பட்மின்டன் இன் முன்னர் இருந்த நிர்வாகத்திற்குரியதாகும். | சங்கத்தின் எதிர்கால திசையை நோக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கத்தின் 7(XII) ஆம் | இலங்கை பட்மின்டன் இன் புதிய நிர்வாகம் 2019 | தேசிய விளையாட்டு சங்கத்தின் |

| | | |
|---|---|---|
| இலக்க கட்டளையின் பிரகாரம் அடுத்த ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டு ஆண்டு ஆரம்பமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | யூலை மாதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் இந்த அவதானிப்பு முன்னர் இருந்த நிர்வாகத்திற்கு உரியதாகும். | கட்டளைகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்ட மொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3.3 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சங்கத்தின் வருமானம் ரூபா 51 மில்லியன் மற்றும் செலவினம் ரூபா 61 மில்லியனாகவும் காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 4 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் சங்கத்தின் நடவடிக்கை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்துவதற்காக சங்கத்தின் நிர்வாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எமது சங்கத்தின் வெளிவாரி கணக்காய்வாளராக கணக்கர்வுக் கம்பனியொன்று செயற்படுவதுடன் உள்ளக கணக்காய்வினை விட அதிகளவில் வெளிவாரி கணக்காய்வு நிறுவனத்தால் நிறைவேற்றப்படுவதாக நாம் நம்புகின்றோம். | சம்மேளனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டிற்காக நிதியாண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சங்கத்தினால் பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை பட்மின்டனின் புதிய நிர்வாகம் 2019 யூலை மாதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் இந்த அவதானிப்பு முன்னர் இருந்த நிர்வாகத்திற்கு உரியதாகும். | பாதீட்டு சரியாக தயாரிக்கப்பட்டு ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்த வேண்டும். |